என்று கேட்கிறார்கள். ஆகவே தான் பொது மக்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் இந்த நகரங்களில் உள்ள வண்டிகளுக்கு மீட்டர் பொருத்தப்படும். எல்லா நகரங்களிலும் அல்ல.

Supermarkets

*177 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state the monthly rent for each building where the Supermarkets are now located in Tamilnad ?

சிறப்பங்காடிகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழகத்தில் தற்போதுள்ள சூப்பர் மார்க்கெட் அமைந்திருக்கும் கட்டிடங்கள் ஒவ்வொன்றின் மாத வாடகை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் அமைந்திருக்கும் கட்டிடங்களின் மாத வாடகை பின் வருமாறு :—

	ரூ.
(1) தென் சென்னை காமதேனு சிறப்பு அங்காடி.	26,982
இரண்டு கிடங்குகள்	2,710
(2) திருச்சிராப்பள்ளி சிறப்பு அங்காடி	250
(3) மதுரை சிறப்பு அங்காடி	2,000
ஒரு கிடங்கு	500
(4) சேலம் சிறப்பு அங்காடி	2,781

(5) கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் ஏற்படுத்தியுள்ள சிறப்பு அங்காடி சொந்தக் கட்டிடத்திலேயே அமைந்துள்ளது. இருப்பினும், சிறப்பு அங்காடியின் வாடகைச் செலவாக மாதந்தோறும் ரூ. 1,500 சங்கக் கணக்கில் கூட்டப்பட்டு வருகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, திருச்சியில் மட்டும் மிகவும் குறைவாக இருக்கக் காரணமென்ன ? மதுரையில் குறைக்கப் பட்டிருப்பதாகச் சொன்னார்கள். சென்னையில் மிகவும் அதிகமாக இருக்கிறது. அதைக் குறளகத்திற்கு மாற்றப்போவதாக சொன்னார்கள். அந்த உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இரண்டு, மூன்று கேள்விகள் சேர்ந்து கேட்டிருக்கிறார்கள். திருச்சியில் அங்காடியிருக்கும் கட்டிடம் நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடம். அதை அரசாங்கததின் அனுமதியோடு வாடகைக்கு விடப்பட்டிருப்பதால் குறைவாக இருக்கிறது. மதுரையில் இருப்பது அது பாங்கிற்கு, வங்கிக்கு, சொந்தமான கட்டிடம். அதற்கு ஏற்கனவே 5,000 ரூபாயாக இருந்தது. அதற்குப் பின்னால் சட்டமன்றத்தில் கேள்வி கேட்ட பிறகு அது பற்றி பரிசீலனை

செய்து பிறகு ரூ. 2,500 ஆகக் குறைக்கப்பட்டது. அதற்குப் பின்னல் மாடியை விட்டுக் கொடுத்ததால் ரூ. 2,000 ஆகக் குறைக்கப் பட்டது. சென்னையைப் போறுத்த வரையில் அது ஒரு தனிக் கட்டிடமாக இருந்து, வாடகைக்கு எடுத்துக் கொண்டதால், அந்தத் தொகை அதிகமாகவிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் கணக்கிட்டுப் பார்த்த ஸ்பெஷல் ஆபீசர் கூட சதுர அடிப்படி கணக்குப் பார்த்து சரியான வாடகை தான் என்று நிர்ணயம் செய்திருக் கிறார். குறளகம் காதி போர்டிற்கு சொந்தமான கட்டிடம். அதில் வட சென்னைக்காக தனியாக ஆரம்பிக்கலாம் என்ற ஆலோசனையிருக்கிறது.

திரு. சே. பாலசுப்பிரமணிய அய்யர் : இது சரியான வாடகையாக இருக்கலாம். வாடகை குறைவாகவுள்ள வேறு கட்டிடம் பார்க்கக் கூடாதா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : சிறப்பு அங்காடியில் இந்த சிரமம் இருக்கிறது. எல்லா பொருட்களும் ஒரே இடத்தில் வாங்கவேண்டு மென்ற அடிப்படையில் இது பெரிய கட்டிடமாக இருக்கவேண்டும். இது பெரியதாகவும், மூன்று மாடியுள்ளதாகவும் இருக்கிறது. ஆகவே வாடகை கூடுதலாகயிருக்கிறது. இப்போது சொல்லப்பட்ட காதி போர்டிற்கு சொந்த மான குறளகத்தில வட சென்னைக்குத் திறக்கப்பட வேண்டுமானால், அந்த வாடகையை கணக்கிடும்போது, இதைவிட அதிகமாக கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார் : தலைவரவர்களே, சேலத்திலே உள்ள சிறப்பு அங்காடி கட்டிடம் மாவட்டக் கழகத்திற்கு சொந்தமாகயிருந்து இப்போது அரசாங்கத்தின் கட்டிடமாக இருக்கிறது. இதற்கு இப்போது யார் வாடகை வாங்குகிறார்கள் ? எந்த கணக்கில் வாங்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இந்த கட்டிடம் ஒப்படைக்கும் போது, மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்காகக் கூட்டுறவு அமைப்போடு ஒப்பந்தம் செய்து சர்க்கார் அலுவலகங்கள் வைக்கப்பட்டிருக்கும் மற்ற கட்டிடங்களுக்கு, எவ்வளவு வாடகை என்று கணக்கிடப்படுகிறதோ அந்த அடிப்படையிலும், அங்கேயுள்ள மசால்ஜி, வாட்ச்மென் போன்றவர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலும் இதை ஏற்றுக் கொள்வது என்று கணக்கிடப்பட்டுள்ளது.

Charitable institutions for physically handicapped persons

*178 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the names of charitable institutions in Tamilnad to help the physically handicapped persons ;

(*b*) the nature of aid given by those institutions to the physically handicapped persons ;

(*c*) the assistance given by the Government to these institutions ; and

(*d*) whether pension will be granted to the physically handicapped persons ?

உறுப்பிழந்தவர்களுக்கு உதவி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தமிழகத்தில் அங்கஹீனர்களுக்கு உதவி செய்து வரும் தர்ம ஸ்தாபனங்கள் எவை எவை ?